**தலைப்பு 233 – அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 ஜூன் 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 பிரிவின் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மை**

2018 நவம்பர் 21 திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அத் தேவையில் இருந்து விளகிய சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| ------------------------------------------- | ----------------- | ----------------------------------------- |

| | | | |
|---|---|---|---|
| (அ) | மேற்கூறிய சுற்றறிக்கையின் பந்தி 3.3 இன் பிரகாரம் நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கை இடும் போது அந்த சொத்துக்களின் பிரதான பேரேட்டு மீதிகளின் பெறுமதி, தனிப்பட்ட சொத்து மீதிகளின் பெறுமதியுடன் பரிசோதனை மேற்கொண்டு அப் பெறுமதி இணங்குவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப் படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி அல்லாத சொத்துக்களின் பேரேட்டு மீதிகளின் பெறுமதி மற்றும் அரச கணக்குத் திணைக்களத் தினால் சமர்ப்பித்திருந்த பேரேட்டு மீதி பெறுமதி இடையே கூட்டுத்தொகை ரூபா 37,450,791 இற்கான வித்தியாசங்கள் காணப்பட்ட தாக அவதானிக்கப்பட்டது. | ஒவ்வொரு ஆண்டிலும் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி அல்லாத சொத்துக்கள் மீதான சரியான அறிக்கையொன்று திறைசேரிக்கு சமர்ப்பித்து அதன் மூலம் பெற்றுக் கொள்ளும் பிரதான பேரேட்டு மீதிகளுடன் திணைக்களத்தின் பிரதான பேரேட்டு மீதிகள் மற்றும் தனிப்பட்ட மீதி அட்டவணை இணங்கக் கூடிய விதத்தில் பதிவேடுகள் பேணப்பட வேண்டும். | நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பாக ஏ.சீ.ஏ-6 படிவத்தின் மூலம் காட்டி யுள்ளது பௌதீக ரீதியாக திணைக்களத்தில் காணப்படும் சொத்துக்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் குறிப்பிடப்படும் சொத்துக்களின் பெறுமதி ஆகும். கணினி நிகழ்ச்சித் திட்டத்தில் நிலையான சொத்துக்களின் தரவு உட்படுத்தும் போது தவறுதலாக சில சொத்துக்களின் பெறுமதி இரண்டு முறை உட்படுத்தி இருந்தமையால் இந்த வித்தியாசம் காட்டுகின்றது. ஏசீஏ6 படிவத்தின் மூலம் காட்டப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதி சரியானவையாக காணப் பட்டதுடன் கணினி நிகழ்ச்சித் திட்டத்தின் தரவுகள் தற்போது சரிசெய்யப்பட்டு ள்ளது என தயவுடன் அறிவிக்கின்றேன். |
| (ஆ) | சுற்றறிக்கையின் 3.4 பந்தியின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் (III) கீழ் உள்ள கடப்பாடுகள் மற்றும் பொறுப்பு க்கள் கூற்று திறைசேரியினால் ஒவ்வொரு செலவுத் தலைப்புகள் தொடர்பாக வழங்கப்படும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுடன் இணங்க வேண்டியிருந்தது. எனினும் திணைக்களம் தொடர்பாக திறைசேரி கணக்கு திணைக்களத்தினால் சமர்ப்பித் | திணைக்கள நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் (iii) இன் கீழ் ஒவ்வொரு செலவு விடயத்திற்கான அனைத்து பொறுப்புக்களை இணக்கஞ் செய்து சரியாக இனங்காண வேண்டும். அதே போல் அந்த பொறுப்புக்கள் திறைசேரியினால் | நிதிப்பிரமாணம் 94(1) இன் ஏற்பாடுகளின் படி மீண்டுவரும் தன்மையுள்ள செலவுகளுக்காக கடந்த மூன்று ஆண்டுகளில் சராசரி 50 சதவீதம் வரை பொறுப்புகள் அணுகும் இயலுமை ஒன்று காணப்படுகின்றது. எவ்வாறாயினும் திறைசேரி யினால் செயற்படுத்தப்படும் New Cigas கணக்கீட்டு மென்பொருளின் கீழ் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளை காட்டக் |

| | | |
|---|---|---|
| திருந்த கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் மற்றும் நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிட்டுள்ள பெறுமதி இடையே ரூபா 4,250,343 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | ஒவ்வொரு செலவு தலைப்புகள் தொடர்பாக வழங்கப்படும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுடன் இணங்கி யிருக்க வேண்டும். | கூடியதாக உள்ளது. ஆண்டிற்காக அங்கீகரிக்கப் பட்ட ஏற்பாட்டு வரையறை யில் மாத்திரமே. அதனால் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பொறுப்பு க்கள் ஒரு பகுதி New Cigas நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் காட்டுகின்றது. |

**1.6.2 பொறுப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ரூபா 3,130,190 இற்கான பொறுப்புக்கள் 2019 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் தீர்த்திருந்த போதிலும் அப் பெறுமதி 2018 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக் கள் மற்றும் கடப்பாடுகளின் கீழ் அறிவிக்கப்பட்டிருந்தது. | அனைத்து பொறுப்பு க்களையும் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2018 ஆண்டின்கான 2019 ஆண்டின் போது செலுத்தியிருந்த இலக்கம் 233-1-1-0-2401 மற்றும் 233-1-1-0-1002 இலக்கங் கொண்ட செலவு விடயங்கள் தொடர்பாக ரூபா 3,130,190 இற்கான தொகை தவறுதல் காரணமாக 2018 நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக் கள் என பதிவு செய்திருக்கவில்லை. |

**1.6.3 நிதி நிலைமைக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆண்டிற்கான திணைக்களம் தயாரித்திருந்த நிதி நிலைமை மீதான கூற்று (ஏசீஏபீ (ACAP) படிவம்) நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக் களின் பெறுமதி மற்றும் அந்த நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்தி ருந்த ACA – 6 படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி அல்லாத சொத்துக்கள் மீதான கூற்றில் சொத்துக்களின் பெறுமதி இடையே ரூபா 75,511,084 இற்கான இணக்கமின்மை ஒன்று காணப்பட்டது. | நிதி அல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதியுடன் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வித்தியாசங்களை சீராக்கல் மேற்கொண்டு வருட இறுதியிலுள்ள சரியான மீதியை பெற்றுக் கொள்ளல் மேற்கொள்ளப்பட வேண்டும். | தவறுதலாக கைதவிர்ப்பு செய்திருந்த வாகனங்களின் பெறுமதி ஏசீஏ 6 படிவத்தில் பதிவு செய்யப்பட்டிருக்காத துடன் அதன் பிரகாரம் ஏசீஏ படிவத்தின் மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,248,744,768 தொகை என திருத்தப்பட வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த இழப்புகள் சேதங்கள் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்த ரூபா 818,941 இற்கான நட்டங்கள் சேதங் களின் மூலம் இரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 352,479 இற்கான தொகை சேதங்கள் நட்டங்கள் அறவிடப்பட்டிருந்த துடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மேலும் அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 466,462 தொகையாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய நட்டங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 2,229,111 தொகை என நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பித் திருந்த இழப்புகள் சேதங்கள் பதிவேற்றின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 2,695,573 தொகை ஆக இருந்தது. | இழப்புகள் சேதங்கள் பதிவேட்டில் உட்படுத்த வேண்டிய அனைத்து தகவல்களும் உட்படுத்தி சரியாக பேணப்படல் மேற்கொள்ளல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக் களின் மூலம் காட்டப்பட்டி ருந்தவாறு இழப்புகள் சேதங்கள் பதிவேடு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக கருணையுடன் அறிவிக்கின்றேன். |

### 1.6.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை 104 | மீளாய்வாண்டு ஏற்பட்டிருந்த 12 வாகன விபத்துக்கள் தொடர்பாக விபத்துக்கள் ஏற்பட்ட உடனேயே அந்த விபத்து ஏற்படுவதற்கான காரணத்தை அறுதியாக கண்டறிவதற்கும் மற்றும் பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | மோட்டார் வாகன விபத்து ஏற்பட்ட உடனேயே அதன் அளவு மற்றும் காரணத்தை அறுதியாக கண்டறிவதற்கு மற்றும் பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரை தீர்மானிப்பதற்கு விசாரணை ஒன்று நடாத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2018 ஆண்டில் ஏற்பட்டிருந்த 12 விபத்துகள் தொடர்பாக இழப்பீடு தொடர்பாக காப்புறுதி நிறுவனத்தில் இருந்து செலுத்தியிருந்த பற்றுச்சீட்டு எங்களுக்கு கிடைத்திருக்காமையினால் கணக்காய்வு ஐயவினா மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் நிதிப் பிரமாணம் 104 ஆரம்ப விசாரணை மேற்கொண்டிருக்கவில்லை. தற்போது உரிய கொடுப்பனவுகளின் பற்றுச் சீட்டுகள் கிடைத்திருப்பதினால் குறிப்பிட்ட வாகன விபத்துக்களில் ஆரம்ப விசாரணைகள் மேற்கொள் ளப்பட்டு முடிந்துள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) <u>செலவு முகாமைத்துவம்</u> | | |
| நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம், தமது மதிப்பீட்டிற்கு உரிய வரைபு மதிப்பீடு, பிரமாணங்களுக்கு இணங்க தயாரிப்பதை பொறுப்பேற்றுக் கொள்ளல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். எனினும் மீளாய்வாண்டிற்காக ஏற்பாடுகள் வழங்கியிருந்த ஒட்டுமொத்த மீண்டுவரும் செலவு விடயங்கள் 17 இல் 06 மீண்டுவரும் செலவு விடயங்களுக்கு ஒதுக்கியிருந்த ரூபா 6.69 மில்லியன் தொகை ஏற்பாடுகள் வேறு 5 மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் மூலதன செலவு விடயங்களுக்காக 10 சந்தர்ப்பங்களில் மாற்றப்பட்டிருந்தது. அதே போல் மூலதன செலவு விடயம் ஒன்றிற்கு ஒதுக்கியிருந்த ரூபா 1.95 மில்லியனிற்கான ஏற்பாடுகள் வேறு 02 மூலதன செலவு விடயங்களுக்கு 02 சந்தர்ப் பங்களில் மாற்றப்பட்டிருந்த துடன், குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலமும் ரூபா 73.34 மில்லியனிற்கான மேலதிக ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் தேவைகள் நிறைவேறும் விதத்தில் நடவடிக்கை எடுத்து நடைமுறை சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரித்தல் நடைபெற்றிருக்கவில்லை. | முன் தீர்மானிக்க இயலுமான அனைத்து சேவைகளையும் உட்படுத்தி முடிந்த அளவு முற்றாக சரியான முறையில் வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | மதிப்பீடுகள் தயாரிக்கும் போது கணக்காய்வு அவதானிப்புக் களின் மூலம் சுட்டிக் காட்டியுள்ள விடயங்கள் தொடர்பாக உச்சமட்ட கவனம் செலுத்தப்பட்டு முடிந்த அளவு நடைமுறை சாத்தியமாக மற்றும் சரியான முறையில் செயற்பட்டு 2018 ஆண்டிற்காக ரூபா 689.06 மில்லியனிற்கான மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டது. எவ்வாறாயினும் திறைசேரியினால் ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டை விட அண்மித்த ரூபா 326.71 மில்லியன் குறைவாக இருந்தது. இவற்றில் மேலதிகமாக புதிய உபகரணம் ஒன்று கொள்வனவு செய்வதற் காக விண்ணப்பத்திருந்த ரூபா 280 மில்லியன் தவிர கவனம் செலுத்திய போது பொதுவான செலவு விடயங்களுக்காக ரூபா 46.71 மில்லியன் குறைவாகவே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இந்த குறைவினை செலவுக் கட்டுப்பாட்டின் மூலம் அணவல் செய்வதற்கு நேரிட்டிருந்தது. இந்த செலவுக் கட்டுப்பாடு திணைக்களத்தின் அலுவல்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டி இருந்ததுடன் அனைத்து செலவு விடயங்களை கட்டுப்படுத்துதல் செயல்முறை சாத்தியமாக இருக்கவில்லை. அதன் பிரகாரம் கட்டுப்படுத்தக் கூடிய செலவு விடயங்களின் மீது செலவுகளை கட்டுப்படுத்தி சேமித்துப் பெற்ற ஏற்பாடுகளை வேறு அத்தியவசியமான செலவு விடயங்களுக்கு நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் மாற்றப்பட்டுள்ளது. அவ்வாறு ஏற்பாடுகளை மாற்றுவதன் மூலம் மேவகை செய்துகொள்ள இயலாத |

அத்தியவசியமான செலவுகளை மேற்கொள்வதற்காக ஒரே ஒரு மாற்று செயற்பாடு ஆகிய மேலதிக ஏற்பாடுகள் ஒதுக்குவதற்கு நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 03 மீண்டுவரும் செலவு விடயங்களின் மற்றும் 02 மூலதன செலவு விடயங்களில் தேறிய ஏற்பாடுகள் ரூபா 165.12 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் அந்த செலவு விடயங்களின் சேமிப்பு ரூபா 42.81 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால் சேமிப்பு தேறிய ஏற்பாடுகளில் 16 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை வீச்சு ஒன்றினை கொண்டிருந்தது. | சிக்கனம் மற்றும் வினைத்திறன் தொடர்பாக உரிய கவனத்துடன் முதலில் நிச்சயிக்கக் கூடிய அனைத்து சேவைகளையும் உட்படுத்தி முற்றாக சரியாக இருக்க வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | கட்டளை இடப்பட்ட இரசாயனப் பொருட்களில் ஒரு பகுதி கணக்கு ஆண்டு முடிவடைய முன்னர் கிடைக்கப் பெறாமை, கட்டிடத்தின் சேதமடைந்துள்ள கதவு லொக் மற்றும் துணை பாகங்களை திருத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் வருட இறுதிக்கு முன்னர் அவ்விடயங்களை பூர்த்தி செய்து சிட்டைகள் சமர்ப்பித்தி ருக்காமை, குருநாகல் ஆய்வு கூடத்தை மூடிவிட்ட காரணத்தினால் தொடர்ந்தும் வாடகை செலுத்துவதற்கு தேவைப்படாமை, மதிப்பீட்டு பெறுமதியை விட சமர்ப்பிக்கப் பட்டிருந்த கூறுவிலைகள் கணிசமான எண்ணிக்கையினால் குறைந்திருத்தல் மற்றும் நாணயக் கடிதம் திறக்கப்பட்ட FID மற்றும் Alocolizer ஆகிய உபகரணங்கள் வருடம் முடிவடைய முன்னர் விடுவித்து கொள்வதற்கு முடியாமை ஆகிய காரணங்களினால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு அணுகுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 94(1) இன் பிரகாரம் எந்த திணைக்களத் தினாலும் வேலை ஒன்று அல்லது சேவை ஒன்று அல்லது வழங்கள் ஒன்றிற்கான செலவுகள் எதற்கும் அல்லது கடப்பாடு ஒன்றின் கடப்படக் கூடாது. அதே போல் அதற்காக மேற்கொள்ளப் பட்ட பொறுப்புக்கள் மற்றும் செலவுத் தொகை எச் சந்தர்ப்பத்திலும் நிதிய ஆண்டிற்காக ஒதுக்கியுள்ள ஏற்பாட்டுத் தொகையை மிகைக்கக் கூடாது. எனினும் 03 செலவு விடயங்கள் தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தொகையை மிகைத்து ரூபா 3.36 மில்லியன் இற்கான பொறுப்புக்களுக்கு அணுகி இருந்தது. | திணைக்களத்தினால் வருடாந்த ஏற்பாடுகள் இருந்தால் அன்றி வேலை ஒன்று அல்லது சேவை ஒன்று அல்லது வழங்கள் ஒன்றிற் காக செலவுகள் எதற்கும் அல்லது கடப்பாடு ஒன்றிற்கு கடப்படக் கூடாது. | இந்த செலவு விடயங்கள் வருடாந்தம் மீண்டுவரும் தன்மையுள்ள சேவைகள் மற்றும் வழங்கல்களுக்காக தொடர்புடைய செலவு விடயங்களாகும் நிதிப்பிரமாணம் 94(11) ஏற்பாடுகளின் மூலம் காட்டப்பட்டுள்ள வரையறை களுக்கு உட்பட தேவையினை கவனத்தில் எடுத்து இந்தப் பொறுப்புக் களுக்கு அனுகப்பட்டது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் சட்டம் சார்ந்த அறிவியல் பிரிவு, சுடுபடை கலன்கள், ஏவுகணை அறிவியல், வெடிப் பொருட்கள் மற்றும் தீ விசாரணைப் பிரிவு, போதைப் பொருட் பிரிவு, போதை அறிவியல் மற்றும் DNA பிரிவு, சட்டம் சார்ந்த நச்சுத் தன்மை பிரிவு, சந்தேகத்திற்கு இடமான அலுவல்கள் பதிவேடு, டிஜிடல் மோசடி விசாரணை பிரிவு, பல்வேறு வழக்குகள் என 07 பிரிவுகள் காணப்பட்டன. மேலும் உணவு, மதுசாரம், பால் மற்றும் நீர் என்பவற்றிற்கான 04 ஆய்வு கூடங்களுக்காக வழக்கு விடயங்களுக்காக நீதிமன்றங் களின் மூலம் மீளாய்வாண்டின் போது 42,166 விஷேடத்துவ அறிக்கைகள் அழைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டதுடன் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறிக்கை அனுப்பப் படாமல் மீதியாக இருந்த அவ்வாறான அறிக்கைகளின் எண்ணிக்கை 6,168 ஆக இருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது 36,647 அறிக்கைகள் நீதிமன்றங்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 11,687 அறிக்கைகள் வழங்குவதற்கு முடியாதிருந்தது. அதன் பிரகாரம் வழங்குவதற்கு முடியாதிருந்த அறிக்கைகளின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 89 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. | வருடாந்த வழக்குகள் அதிகரிப்பதற்கு ஒப்பாக வழக்கு அறிக்கைகளை பெற்றுக் கொடுக்கும் எண்ணிக்கை அதிகரிக்கும் நடைமுறை ஒன்றினை இனங்கண்டு செயற்படுத்த வேண்டும். | இலங்கையில் நடைபெறும் அனைத்து குற்றங்கள் தொடர்பாக நீதிமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்படும் பல்வேறு வழக்குச் சான்று பொருட்களை பகுப்பாய்வு செய்யும் இலங்கையிலுள்ள ஒரே நிறுவனம் அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வு திணைக்களமாகும். திணைக்களத்திற்கு புதிதாக சேர்க்கப்பட்டுள்ள DNA மற்றும் இலத்திரனியல் குற்றங்கள் பகுப்பாய்வு ஆய்வு கூடத்திற்காக கிடைக்கும் வழக்கு சான்றுப் பொருட்களின் எண்ணிக்கை அதிகரித்தல், அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாத வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்தலையும் பாதித்துள்ளது. அதே போல், சட்ட அறிவியல் பிரிவிற்கான ஆய்வு கூடத்திற்கு கிடைக்கும் வழக்கு சான்று பொருட்கள் ஒன்றிற்கு ஒன்று வித்தியாசப்படுவதுடன் அதற்காக ஒன்றிற்கு ஒன்று வித்தியாசமான பகுப்பாய்வு முறைகளும் பயன்படுத்த நேரிடுகின்றது. பகுப்பாய்வு முறைமையை தயாரிப்பதற்கு நீண்ட காலம் செலவிடுவதற்கு நேரிடுவதும் அறிக்கையிடப் படாத வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்தலையும் தாக்கியுள்ளது. மேலும் 2017 ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆண்டின் போது பகுப்பாய்விற் காக கிடைத்திருந்த வழக்கு களின் எண்ணிக்கை 30 சதவீதத்தினால் (9778) அதிகரித்திருந்தது.<br>தற்போது கூடுதலான வழக்கு சான்றுப் பொருட்கள் கிடைப்பது போதைப் பொருட்கள் மற்றும் உளநிலை மாற்றுப் பொருட்கள் பிரிவிற்கே ஆகும். அதன் காரணமாக, ஏனைய ஆய்வு கூடங்களில் இருந்து பெற்றிருந்த 4 உத்தியோகத்தர் கள் போதைப் பொருட்கள் மற்றும் உளநிலை |

மாற்றுப் பொருட்கள் பிரிவுக்கு இணைப்பதற்கு 2018 ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப் பட்டது. அது தவிர விடுமுறை நாட்களில் வேலை செய்வதற்கு உத்தியோகத்தர் களை அறிவூட்டியிருந்ததுடன் 2018 திசெம்பர் வரை 05 விடுமுறை நாட்கள் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்வதற்கு அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

அது தவிர, 31 உதவி இரசாயன பகுப்பாய்வாளர் பதவிகள் புதிதாக அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த பதவிகளுக்கு ஆட்கள் சேர்ப்பதற்காக வர்த்தமானி அறிவித்தல் இந்த ஆண்டில் வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப் படுவதுடன் அதன் மூலம் அறிக்கைகள் வழங்கும் தாமதத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க இயலும்.

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 40(1) இன் பிரகாரம் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு அலுவல் களுக்காக தகைமையுள்ள கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்திருக்கவில்லை. எவ்வாறாயினும் திணைக்களத்தின் அங்கீகரிக்கப் பட்ட பதவியணியாக உள்ளகக் கணக்காய்வு பதவி ஒன்று 2016 செப்தெம்பர் 01 திகதி முதல் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரித்திருக்கவில்லை. | திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு அலுவல்களுக்காக தகைமையுள்ள கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரித்தலும் மேற்கொள்ளப்பட வெண்டும். | உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவரை நியமனம் செய்யும் படி பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சை கோரியுள்ளேன். உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்த உடன் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களம் சட்டம் சார்ந்த அறிவியல் மற்றும் உணவு அறிவியல் என பிரதான பிரிவுகள் 02 இனைக் கொண்டிருந்ததுடன் அது இலங்கையில் உள்ள ஒரே ஒரு சட்டம் சார்ந்த அறிவியல் ஆய்வு கூடம் என சுடுபடை கலன்கள் அறிவியல், வெடிப் பொருட்கள் மற்றும் தீவிசாரணை, போதைப் பொருட்கள், போதை பொருள் அறிவியல் மற்றும் DNA, சட்ட நச்சு அறிவியல், சந்தேகத்துக்கு இடமான பதிவேடுகள் மற்றும் டிஜிடல் மோசடிகள், பல்வேறு வழக்குகள், | நிறுவனத்தின் குறிக்கோள் மற்றும் பிரதான கருமங்களை வினைத் திறனுடன் நிறைவேற்றுவதற் காக சிரேஷ்ட மட்டப் பதவிகள் தொடர்பாக பதவியணியினர் சேர்த்தல் முக்கிய கருமம் ஒன்று என கவனம் செலுத்தி செயற்படுதல் | அரசாங்க பிரதி இரசாயனப் பகுப்பாய்வாளர் சந்தேகத் திற்கு இடமான பதிவேடுகள் தொடர்பான பிரதி இரசாயன பகுப்பாய்வாளர் பதவி உட்பட இலங்கை விஞ்ஞான ரீதியான சேவையின் உத்தியோகத்தர் 1 தர பதவிகளுக்கு நியமனம் செய்வதற்காக தயாரித்திருந்த வர்த்தமானி அறிவித்தல் பகிரங்க சேவை ஆணைக் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர் பதவிகள் 02 வெற்றிடங்கள் |

உணவு, மதுசாரம், பால் மற்றும் நீர் ஆகிய பிரிவுகளில் இருந்து இலங்கையில் பல்வேறு நீதி மன்றங்களில் நடைபெறும் வழக்குகள் தொடர்பான விஷேடத்துவ அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கு வேண்டியிருந்தது. எனினும் சிரேஷ்ட மற்றும் மூன்றாம் மட்ட பதவியணியில் 51 வெற்றிடங்கள் காணப்படுவதுடன் அந்த வெற்றிடங்களை நிரப்பு வதற்கு நடவடிக்கை எடுக்காமை திணைக்களத்தின் மேற்கூறிய கருமங்களுக்காக நேரடியாகவே தாக்கியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

காணப்படுவதுடன் தற்போது பிரதி இரசாயனப் பகுப்பாய்வாளர் பதவியில் இரண்டு உத்தியோகத்தர் மாத்திரம் நிரந்தரமான நியமனம் பெற்றுள்ளனர். மேலதிக இரசாயனப் பகுப்பாய்வாளர் பதவிக்காக நியமனம் செய்யக் கூடிய பிரதி இரசாயனப் பகுப்பாய்வாளர் பதவியில் காணப்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு முன்னர் பிரதி இரசாயனப் பகுப்பாய்வாளர் வெற்றிடத்தை நிரப்புதல் மேற்கொள்ளப்பட வேண்டும். அதன் காரணமாக பிரதி இரசாயனப் பகுப்பாய்வாளர் பதவியின் வெற்றிடத்தை நிரப்பிய பின்னர் மேலதிக இரசாயனப் பகுப்பாய்வாளர் பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
32 உதவி இரசாயனப் பகுப்பாய்வாளர் பதவிகளுக்காக புதிதாக ஆட்கள் சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.
திணைக்களத்தில் பணிப்பாளர் (நிர்வாக) பதவிக்காக 2017.07.24 திகதி முதல் ஒப்பந்த அடிப்படை யில் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்திருந் ததுடன், அந்த உத்தியோக த்தரின் சேவைக் காலத்தை 2019.01.01 முதல் 06 மாதங்கள் நீடிக்கப்பட்டிருந்தது.
உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவரை நியமனம் செய்யும் படி பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடம் கோரியுள்ளேன்.